

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டுத் திடல் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.09.2024), தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டு மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (20.09.2024) திருவண்ணாமலை மாநகராட்சியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தினை நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திருவண்ணாமலை – காந்தி நகர் பைபாஸ் சாலையில் கட்டப்பட்டு வரும்

# புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

திருவண்ணாமலை, செப்.22-

திருவண்ணாமலை பகுதியில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (20.9.2024) திருவாண்ணாமலை மாநகராட்சி காந்தி நகர் பைபாஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகள் மற்றும் பேருந்து நிலையத்தில் எதிரே அமைந்துள்ள இடங்கள் நில கையகப்படுத்தப்பட்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு சட்டப் போவை துணைத்தலைவர் பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கா பாண் டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறப்பினர் சி.என்.அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது :-

திருவண்ணாமலை ஆன்மீக தலமாக சிறந்து விளங்குவதால் இங்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே இருக்கிறது. மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மாவட்ட மக்களின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய பேருந்து நிலையத்தை திருவண்னாமலையில் கட்டுவதற்கு ஆணையிட்டதன் அடிப்படையில் அரசின் சார்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும், தற்போது கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தில் கூடுதலாக பேருந்துகளை நிறுத்துவதற்கு கூடுதல் இடவசதியை ஏற்படுத்தும் பொருட்டு, இப்பகுதியை ஒட்டியுள்ள அரசுக்கு சொந்தமான ஏறத்தாழ 4 ஏக்கர் நிலப்பரப்பில் பேருந்து நிலைய கட்டுமான பணிகளை விரிவாக்கம் செய்யும் பணிகளுக்காக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்பொழுது கூடுதலாக ரூபாய் 15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகளும் விரைவில் நடைபெறவுள்ளது.

மேலும் முதற்கட்ட பணிகள் விரைவில் முடித்து போடுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட உள்ளது. விரிவாக்கப்பணிகளும் கூடுதலாக 6 மாத காலம் வரை தொடர்ந்து நடைபெறும். மேலும் விரிவாக்கம் பணிகள் நடைபெற்ற பிறகு, ஏறத்தாழ 100 பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் நிறுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. பேருந்து நிலையத்தினை விரைவாகவும் தரமாகவும் கட்டி முடிப்பதற்கு மாநகராட்சியை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது போன்றுதிருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் தேவைகளுக்கேற்ப பல்வேறு திட்டப்பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

தொடர்ந்து, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மேலத்திக்கான் ஏரியில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது, நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் கே.ஜி.சத்திய பிரகாஷ், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி மந்தாகினி, திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் காந்திராஜ், வட்டாட்சியர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட மீன் அங்காடியினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.09.2024) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் உள்விளையாட்டு அரங்கத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட்லைஃப் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள காவல் நிலையங்களிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பில்லை!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 22 -

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள காவல்நிலையங்களிலேயே பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

இது குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே, ஒடிசா மாநிலத்தில் உள்ள காவல்நிலையத்தில் பெண் ஒருவர் உதவி கேட்டு சென்ற நிலையில் ராணுவ உயரதிகாரி பாலியல் வன்கொடுமை செய்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒடிசாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் மோடி, பெண்களின் முன்னேற்றம் குறித்து பேசிய 72 மணி நேரத்தில், காவல்நிலையத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும், இது குறித்து பா.ஜ.க. தலைவர்கள் ஒருவர் கூட கண்டனம் தெரிவிக்கவில்லை என புகார் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், ஒரு வழக்கறிஞர் என்றும், ராணுவ அதிகாரி ஒருவருடன் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாகவும், உதவி கேட்டு வந்த பெண்ணுக்கு இந்த நிலைமை என்றால் மற்ற பெண்களின் நிலை என்னவாக இருக்கும் என்றும் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமர் நரேந்திர மோடி ஒடிசா சம்பவத்தில் மவுனம் காப்பது ஏன் என்றும் சுப்ரியா வினவியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமைக்கு எதிராக போராட்டம் நடத்திய பா.ஜ.க.வினர், ஒடிசா சம்பவத்தை புறக்கணிப்பது ஏன் என்றும் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே கேள்வி எழுப்பியுள்ளார்.




தஞ்சை மத்திய மாவட்ட, மாநகர தி.மு.க சார்பில் நடைபெற்ற மிசா எஸ்.நடராஜன் நூற்றாண்டு விழாவில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், எம்.இராமச்சந்திரன், து.செல்வம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, த.காரல்மார்க்ஸ், மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள், எல்.ஜி.அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, எஸ்.என்.மணிமாறன், கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.